# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **037/ந/2018**

ஆணை எண். **60/2018**

நாள் : **20/03/2018**

திரு G.K. ஸ்டான்லி,
தஞ்சாவூர். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
புதுக்கோட்டை.

– எதிர் மனுதாரர்

தஞ்சாவூர், முனிசிபல் காலனி, எம்.சி. சாலை 2–வது குறுக்குத் தெரு எண்–8 கல்யாணம் நகர் முகவரியில் வசிக்கும் திரு G.K.ஸ்டான்லி அவர்கள் முறையாக தாக்கல் செய்யப்படாத 13.02.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.02.2018 அன்று பெறப்பட்டு 37/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப் படுகிறது :-

## ஆணை

தஞ்சாவூர், முனிசிபல் காலனி, எம்.சி. சாலை 2–வது குறுக்குத் தெரு எண்–8 கல்யாணம் நகர் முகவரியில் வசிக்கும் திரு G.K.ஸ்டான்லி என்பவர் 18.12.2017 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ ஆணை எண்.280/2017–இல் ஆணையிட்ட படி, புதுக்கோட்டை நகராட்சியில் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென்றும், எனவே, நிலுவைத் தொகைக்கான வட்டியை வழங்கிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். முறையீட்டு மனுதாரர் ஒய்வு பெற்ற நகரமைப்பு ஆய்வாளர். இம்முறைமன்ற நடுவம் ஆணை வெளியிட்டபின் உரிய நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி தாமதப்படுத்தினால் அது குறித்து நகராட்சி ஆணையரையோ அல்லது மண்டல நிர்வாக இயக்குநரையோ தொடர்பு கொள்ளவேண்டும் என அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 20–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

பெறுநர்

1. திரு G.K. ஸ்டான்லி,
எண். 8, கல்யாணம் நகர்,
2வது குறுக்குத் தெரு, முனிசிபல் காலனி,
எம்.சி. ரோடு,
தஞ்சாவூர் –613 007.

2. நகராட்சி ஆணையர்,
புதுக்கோட்டை நகராட்சி,
புதுக்கோட்டை.

3. நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர்,
தஞ்சாவூர்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்